**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 596 Of 2024

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20- வது நாள் திங்கக்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜராஜேஸ்வரி | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு.சுப்ரமணியன் | வேலை: | முதன்மை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஆர்.ஏ.சி.பி.சி தெற்கு கிளை, கோயமுத்தூர். |
| வயது | 44 | செல்போன் எண் | |

வா.சா.1 **திருமதி. ராஜராஜேஸ்வரி** ஆக 20.04.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 24.11.2014 – Application - அசல் - **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 27.11.2014 – Arrangment Letter - அசல் - **Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. 27.11.2014 – Agreement for Term Loan - அசல் - **Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 18.08.2018 – Death Certificate - நகல் - **Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 25.11.2014 to 27.10.2023 – Account Statement - நகல் - **Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. – Authorization Letter - நகல் - **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு யாரால் தொடரப்பட்டது என்றால் முன்னாள் மேலாளரான முரளிக்கிருஷ்ணன் தொடர்ந்தார். முரளிக்கிருஷ்ணன் என்பவருக்கு தான் வழக்கின் முழு விபரம் தெரியும் என்றால் சரிதான், நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கின் சங்கதிகள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முரளிக்கிருஷ்ணன் தாவா தாக்கல் செய்ய authorization கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அந்த authorization கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வழக்கு தொடுத்த சமயத்தில் தாக்கல் செய்திருப்போம். முன்னாள் மேலாளரான முரளிக்கிருஷ்ணனுக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் authorization கடிதத்தை ஆவணமாக குறியீடு செய்யப்பட வில்லை என்றால் சரிதான், கோப்பில் உள்ளது, அதன் அடிப்படையில் தான் தாவா தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை முன்னாள் மேலாளரான முரளிக்கிருஷ்ணன் தாக்கல் செய்துவிட்டு தற்சமயம் நீங்கள் வாதி வங்கிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வேண்டிய காரணம் எழுத்து மூலமாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லப்பட வில்லை, பணியிட மாற்றம் காரணமாக தற்சமயம் கிளை மேலாளராக உள்ள

நான் சாட்சியம் அளிக்கிறேன். எனவே காரணம் ஏதும் குறிப்பிடாமல் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வா.சா.6 அங்கிகரிக்கப்பட்ட பத்திரம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் விண்ணப்பத்தை வாதி வங்கி சார்பாக வாங்கியது யார், பரிசீலனை செய்தது யார், கடன் வழங்கியது யார் என்றால் வா.சா.1 விண்ணப்பம் மற்றும் வா.சா.2 கடன் ஏற்பாட்டுக் கடிதத்தில் மேற்படி விவரம் இருக்காது, ஆவணங்களை பார்த்து சொல்ல இயலும். வா.சா.1 விண்ணப்பம் பெறப்பட்டு பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டது முன்னாள் மேலாளரான முரளிக்கிருஷ்ணன் க்கு தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். சாட்சி பட்டியலில் முன்னாள் மேலாளரான முரளிக்கிருஷ்ணன் பெயர் இல்லை என்றால் சரிதான். கடன் வாங்கிய பிரதிவாதியை நீங்கள் நேரடியாக அடையாளம் காட்ட இயலாது என்றால் ஆவணங்களின் அடிப்படையில் அடையாளம் காட்ட இயலும். வா.சா.5 கணக்குப் பட்டியல் நகல் என்றால் சான்றிட்ட நகலாகும். வா.சா.5 ன் அசல் எங்கு உள்ளது என்றால் வாதி வங்கி வசம் உள்ளது, தேவைப்படும் சமயத்தில் கணினி மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.சட்டப்பிரிவு 65 பி ன் படி சான்றிதழ் வழங்கப்படாததால் வா.சா.5 செல்லத்தக்க தல்ல என்றால் சரியல்ல. Bankers Book of Evidence Act ன் படி வா.சா.5 தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.5 ன் சங்கதிகள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.1 முதல் வா.சா.3 ல் பிரதிவாதிகள் கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.4 இறப்பு சான்றிதழ் நகலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.4 நகல் ஆவணம் தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை பெறவில்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.4 ஆவணத்தை சாட்சி ஆவணமாக ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வாதி வங்கி கடன் கணக்கை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் நடவடிக்கைகளுக்கு எழுத்துப்பூர்வமான ஆவண ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் வா.சா.1 கடன் விண்ணபத்தில் பிரதிவாதி கையொப்பம் இட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பிரதிவாதியின் மகனும் வா.சா.1 ல் கையொப்பமிட்டுள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா கடன் வாங்கிய பிரதிவாதியின் மகன் இறந்துவிட்ட காரணத்தினால் தான் அவருடைய தந்தையான பிரதிவாதி மீது தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பிராதிலோ அல்லது பிரமாண வாக்குமூரத்திலோ குறிப்பிட்டு சொல்லி உள்ளீரகளா என்றால் இல்லை. வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியவரை சேர்க்காத காரணத்தினால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு எந்த காரணத்திற்காக யார் மீது தொடர வேண்டுமென்று தெரியாமலே

சாட்சியம் அளிக்கிறீர்கள், எனவே தாவா நிலைக்கத்தக்கதல்ல தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Location: -
Date: 2026.04.20 18:11:39 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.